செய்தித் தாளாகப் பதிவு பெற்றது — வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. — பிரதி விலை: சதம் 15

ஆரம்பம் : விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞு மார்கழி மீ ௩ உ வெள்ளிக்கிழமை (18-12-1970) [இல-௩ எ

## தக்ஷிண கைலாச மான்மியம்

### 9-வது கதிர்காம மகிமையுரைத்தபடலம்

[ "சிவாகம ஞான பாநு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி ]

முன் வளர்ச்சி —2

**கதிர்காம கிரியில் தேவர்கள் கதிர்காமநாதரை வழிபாடு செய்வது.**

கதிர்காம கிரியிற் கந்தவேள் சென்று "இங்கே நாம் வசித்தற் பொருட்டுச் சிறந்த ஒரு நகரையும் அழகிய கோவிலையும் நிருமிப்பாயாக" என்று விசுவகன்மனுக்குக் கட்டளையிட்டார். விசுவகன்மன் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு மாடமாளிகை கோபுரங்கள் மண்டபங்கள் முதலியவற்றைப் பெற்றுச் சிறப்புறுவதுமான பல வீதிகள் உள்ளதுமான நகரத்தைச் சிற்பசாத்திர விதிப்படி இயற்றி நகர மத்தியில் சகல சித்திகளையும் அருளவல்லதும் மங்களகரமாய் உள்ளதும் கோடி சூரியப் பிரகாசமுள்ளதுமாகிய சிந்தாமணி என்னும் ஆலயத்தை அமைத்து இந்திரநீல இரத்தினத்தினால் ஒரு சிங்காசனத்தையும் ஆக்கினான்.

கந்தவேள் இரதத்தினின்றும் இறங்கிப் பிரமாதி தேவர்களோடும் வீரவாகு முதலிய வீரர்களோடும் பூதத் தலைவர்களோடும் கதிர்காம கிரியின் மேலுள்ள நகரத்தினுள்ளே புகுந்து அவ் வீதிகடோறும் உலாப் போந்து சிந்தாமணி ஆலயத்தினது கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்று மண்டபங்களையும் வீதிகளையும் கிருபா நோக்கம்செய்து இரத்தினசிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் இரண்டு திருவடிகளும் புன்னகை புரிந்து பெருங் கருணையோடு ஆனந்தமான திருக்கோலம் காட்டித் தேவருக்கும் முனிவருக்கும் பூதருக்கும், வீரருக்கும் அற்புத தரிசனம் கொடுத்தருளினர். யாவரும் அப் பெருமானுடைய திருவுருவைக் கண்டு வணங்கி ஆனந்தமும அதிசயமும் அடைந்து தோத்திரம் செய்து வணங்கினார்கள்.

"அப்போது தேவர்கள் குமாரக்கடவுளை வணங்கி எம்பெருமானே! தேவரீரை இங்கே பூசித்து வழிபடல்வேண்டும்" என்னும் காதல் கொண்டோம். அதன்பொருட்டு இக் கதிர்காம வரையின்மேல் ஒரு தீர்த்தம் உண்டாக்கித் தரல்வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்கள். பரம கருணாநிதியும் கங்கை புத்திரருமான கதிர்காமநாதர் வீரவாகுவை அழைத்து "எல்லா உலகங்களும் உய்யும்பொருட்டு இந்த மலையின் மேலே புனிதமான தீர்த்தமொன்றை உண்டாக்குவாயாக" என்று ஆஞ்ஞாபித்தார் வீரவாகு அவ் வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு மலையில் தமது கரத்தில் இருந்த தண்டினால் மோதினார். அவ்வாறு மோதிய விடத்தில் ஒன்பது குண்டுகள் தோன்றின. கங்கையானவள் அவ் வொன்பது குண்டுகளினின்றும் புறப்பட்டு எழுந்து புண்ணியமான தீர்த்தமானாள். தேவராதியோர் அதைக் கண்டு ஆனந்தமும் அதிசயமும் கொண்டு தீர்த்தத்தைக் கரங்களினால் எடுத்து நீரை புரோட்சித்துச் சுத்தரானார்கள்.

கதிர்காமநாதரை அக் கங்கையினாலும் பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம் முதலியவைகளினாலும் அபிடேகம் செய்து பொன்னாடை, ஆபரணம, மாலை முதலியவைகளால் அலங்கரித்து நைவேத்தியம், தூபம் தீபம் முதலிய உபசாரங்களால் பூசித்து வணங்கினார்கள். கைகளைச் சிரசின் மேல் கூப்பி வணங்கித் தேவாதி தேவரே! சகல லோக நாயகரே! மந்திர வடிவரே! சாந்தரே! உமக்கு நமஸ்காரம்.

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

இரங்கு நமக்கம் பலக்கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற்பனை கற்பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கும் அடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள்
வாழ்வே வாவென் றருளாயே.

திருச்சிற்றம்பலம்

- மாணிக்கவாசகசுவாமிகள்

## திருவெம்பாவை வழிபாடு

### தினந்தோறும் அதிகாலையில் பஜனை ஊர்வலம்

திருவெம்பாவையின் மகத்துவத்தை மக்களுக்குப் பிரசாரஞ் செய்யும் நோக்கமாக திருவெம்பாவைத் தினங்களில் யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் அவ்வூர் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரிஅம்பாள் ஆலயத்திலிருந்து ஆலயச் சுற்றடல் எங்கும் திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை பஜனையை வழமைபோல நடாத்தவுள்ளார்கள். இந்த வீதிபஜனை அதிகாலை 4-00 மணிக்கு ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 1-1-71 முதல் 10-1-71 ஞாயிறு வரை தினமும் காலை 6-00 மணி வரை நிகழும் பஜனையில் ஏராளமான இளைஞர்கள் கலந்துகொள்ளுவார்கள். திருவாதிரைத்தினத்தன்று மணிவாசகப் பெருமான் திருவீதி எழுந்தருளி வருதலும் வீதி பஜனைப் பூர்த்தியும், ஆலயத்தில் திருவாசக விழாவும் சிறப்பாக நிறைவுபெறும். ந. நி.

## மதுரையில் நாவலர்பெருமான் குருபூசை

சைவத் தமிழ் வளர்த்த சான்றோர் யாழ்ப்பாணத்து நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 91-ஆவது குருபூசை விழா திருவாலவாய்ச் சைவசித்தாந்த சபை தெற்காடி வீதி, ஸ்ரீ மீனாட்சி சுந்தரர் திருக்கோயில் மதுரை-2. இல் அமைந்துள்ள ஷ சபைக் கட்டடத்தில் 21-11-70 - ஆம் நாள் இச் சபையின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நாவலர் பெருமான் திருவுருவப்படத்தினை திரு. A. K. சுப்பிரமணியபிள்ளை M. A. அவர்கள் திறந்து வைக்க திரு. 8. திருமலையப்பன் B A.B.L. அவர்கள் விழாவுக்குத் தலைமை வகிக்க நினைவுநாட் பேருரையை மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் திரு. அ ச. ஞானசம்பந்தம் அவர்கள் நிகழ்த்த விழா கோலாகலமாக அமைந்தது. தேவாரமணி திரு சைலப்ப ஓதுவார் மூர்த்திகள திருமுறை இன்னிசை விருந்தளித்தார்கள். (நமது நிருபர்)

## மக்கட்பிறப்பின் மாண்பு

( திரு. செ. வைத்தியலிங்கம், எம். ஏ., எம் லிட், )

முன் வளர்ச்சி —4

**பொறுப்புள்ள வாழ்விற்கு வழிகள்**

வாழ்விலே பொறுப்பினை உணர்கின்றபோது, தள்ளத்தக்க தீமைகளும் கொள்ளத்தக்க நன்மைகளும் புலனாகும் பயன் மிகு குறிக்கோள் வாழ்வினை அடைய முயலுகையில் நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம் இருந்தே தீரும் "நன்மையும் தீமையும் கலந்து கலந்து போராடிப் போராடி வாழ்க்கையைத் தூய்மை செய்யும். இத் தூய்மை 'வாழ்க்கை வழி பரம் பொருள்' என்பதை உணர்த்தும்" என்று திரு வி க கூறும் அநுபவ உண்மை சிந்திக்கத் தக்கது. பக்தியோடு வைராக்கிய உணர்வு கொண்டு விடின், மாளாத துயர், தீராத இடும்பை, ஓயாத உலைச்சல், தொலையாத துன்பம் என்றெல்லாம் அலைமோதும் வெற்று ஆரவாரச் சொற்களுக்கு இடமிராது

ஒருவன் தன்னை எண்ணிப் பார்க்கும் போது யாக்கை, இளமை, செல்வம் ஆகியவற்றின் நிலையாமையையும் உடற் புன்மையையும் அறிதல் வேண்டும்; அதேவேளையில் சமுதாயத்திடத்துத் தன்னைப் பொருத்திப் பார்க்கும் உடலால் பெற வேண்டிய அருஞ் சாதனையையும் சிந்திக்க வேண்டும்.

"உடம்பினை முன்னம்
இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே
உறுபொருள் கண்டேன்
உடம்பினுள்ளே உத்தமன்
கோயில் கொண்டானென்
உடம்பினை யானிருந் [து
தோம்புகின்றேனே"

என்ற திருமந்திர வாக்கு மிகவும் பொருள் பொதிந்ததாகும், மனிதஉடலைப் புனித ஆலயமாக ஆக்க முந்துதலும் வேண்டும், நம் உடலை முதலில் மதிக்கத் தெரிந்தாற்றான் பிற உடல்களையும் மதிக்க வழியுண்டாகும்.

"எவ்வுயிரும் பராபரன்
சந்நிதி யாகும்
இலங்குமுயிர் உடலனைத்தும்
ஈசன் கோவில்',

என்ற மேலான படியில் நின்று ஆன்மநேய ஒருமைப் பாட்டினை வளர்க்கலாம்.

இதற்கு அடிப்படையாக உலகம், உள்ளம், உயிர், உயிர்க்குயிர் முதலியவற்றின் தன்மைகளையெல்லாம் ஆராய்ந்துணரும் ஞானம் தேவை, அறியாமையிருள் நீங்க நீங்க அகப்புறப் பற்றுக்களால் ஏற்படும் தடைகள் புரியும்; தன்னையறிகின்ற மெய்யுணர்வையும், அதனை நல்லாரிணக்கத்தால் தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்புணர்வையும் புரிந்து செயல்படலாம். 'எல்லாம் இறைவன் செயல்களே' என்பதும் ஞான உண்மையாகும். ஆணவமடங்கிய நிலையிலே அன்புப் பண்பாட்டில் ஈடுபாடு மிகுதியாக ஏற்படும். காமம், வெகுளி, திரிபுணர்ச்சி, பொறாமை, அவா, இன்னாச்சொல் முதலிய குற்றங்கள் தலைகாட்டாமல் மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் தனக்கும் பிறருக்கும் நன்மையே புரிய நாட்டமுண்டாகும். அன்பாகிய அரும்பு ஆர்வ மலருக்கும், ஆர்வமாகிய மலர் நண்பாகிய காய்க்கும், நண்பாகிய காய் அருளாகிய கனிக்கும் வழிகோலும். அருட் கனியிலும் சிறந்தது அவனியில் உண்டோ?...... ஆக, இத்தகைய மெய்ஞ்ஞானத்தைத் தான் பகவத்கீதை அமுதம எனக் கூறுகிறது. அமுதம் அமுதம் அழியாமல் காக்க வல்லது மெய்ஞ்ஞானமும் மரணமிலாப் பெரு வாழ்விற்கு வழிகோலுவது எனத் தெளிதல் நல்லது.

**ஆன்மநேய ஒருமையுணர்வும் இறைவனடி சார்தலும்**

உலகில் எல்லாவுயிர்களும் பரமான்மாவாகிய கதிரவனின் ஒளிக் கதிர்களே என்பது அநுபவத்தில் உண்மையாகும்; அருள் கனிந்த தொண்டினால் இறைவன் வழிபாடே சித்திக்கும். இதுவும் சிறந்த உடயோகமேயாகும். ராஜயோகமாகிய அஷ்டாங்கயோகம் நிகழ்தலும் நன்றேயாம்; நல்லுழைப்பே சிறந்த போகசாதனமாகவும் அமையுமல்லவா?... எல்லாம் உள்ளத்தைப்பொறுத்தவை.

மனக் கவலை மாற்றவும், வினைப் பயனாகிய பிறவிப் பெருங்கடல் நீந்தவும் ஒப்பில்லாத இறைவனடி சார்தல் வேண்டும்; அந்த இறைவனடி சார்தலாவது ஆன்மநேய ஒருமைப் பாட்டால் அமைதல் சிறந்தது. அஃதா

( வளர்ச்சி 2- ஆம் பக்கம் )

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஸு மார்கழி மீ ௨-௨ வெள்ளிக்கிழமை [1970]

## பல்கலைக் கழகமும் மாணவர்களும்

இவ்வருடப் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைப் பேறுகளை நடைமுறைக்குக் கொண்டுவந்த வகை மாணவர்கள் உள்ளங்களில் பெரும் கலக்கத்தையுண்டுபண்ணிவிட்டது. பொறியியற் பிரிவுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுள் அதிக மாணவர்கள் தமிழர்களாயிருந்த படியால் புள்ளி வழங்குதலில் ஏதோ சூழ்ச்சி நடந்துள்ளதென்ற ஒரு முறைப்பாடு உண்டானது. அதனை விசாரணைபுரிந்து குறித்த முறைப்பாடு உண்மையாயிருப்பின் பரீட்சையை நிராகரித்துத் திருப்பிவைப்பதென கல்வியமைச்சு முடிவு செய்தது. இரு பல்கலைக் கழக சிங்கள உபவேந்தரும், ஒருதமிழரும் சேர்ந்த ஒரு குழுவினால் விசாரணை நடத்தப்பட்டு பரீட்சையில் யாதாயினும் மோசடி நடைபெறவில்லையென விசாரணைக் குழு அறிக்கை வெளியிட்டது, தமிழ் மாணவர்கள் தொகையைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தைச் செயல்படுத்த இவ்விசாரணைக் குழுவினறிக்கை தடையாயிருக்கின்றதென்பதையறிந்த சிலரின் தூண்டுதலினால் மொழி முறையில் மாணவர்களைத் தெரிவு செய்ய முடிவுசெய்து, பரீட்சைப் பேறுகளை அனுசரியாது மொழி ரீதியில் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த அநீதியான செயல் தமிழ்மாணவர்கள் உள்ளங்களில் பெருங்கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டது. தமிழ் மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் கல்வியமைச்சு இழைத்த அநீதியை ஆட்சேபித்து ஒரு ஊர்வலத்தையும் ஆட்சேபனைக் கூட்டத்தையும் நடத்தினார்கள்.

கல்வி மந்திரியவர்கள் 23 முஸ்லீம் மாணவர்களை கட்டுப்பத்தையில் சேர்த்த வகையில் நீதியனுசரிக்கப்படவில்லையென கட்டுப்பத்தைக் கல்லூரி மாணவர்கள் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தஞ் செய்தார்கள். அதற்குக் கல்வியமைச்சர் கிராமப்புறத்துக்கும் பட்டணப்புறத்துக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக அம்முஸ்லீம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்களென விளக்கம் கூறியுள்ளார்,

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும முறையில் இவ்வருடம் தான் இவ்விதமான அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன. இவை நாட்டுக்குப் பலவிதமான நட்டங்களை உண்டுபணணும்.

1. பல்கலைக் கழகக் கல்வியின் தரம் குறையும்

2. நாட்டில் மக்களுக்கிடையில் இனவேற்றுமையைத் தூண்டிவிடும்.

3. மாணவர்கள் எதிர்காலத் தலைவர்கள்; அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது விசுவாசம் குறைந்துவிடும்.

கிராமப்புறத்திலுள்ள பிள்ளைகளுக்கு பல்கலைக் கழகக் கல்வி வசதியையளிப்பதற்கு அப்பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளத்தை உதவி ஐந்தாம், ஆறும வகுப்புக்கள் தொடக்கம் கொழும்பு முதலிய நகரங்களிலுள்ள தரமுள்ள கல்லூரிகளில் கல்விப்பயில வைக்கலாம். அம்முறையை தவிர்த்து கல்வியின் தரத்தைக் குறைப்பதற்கு ஏதுவான முறைகளைக் கையாளுதல் நன்மைபயக்காது

## திருவாலவாய்ச் சைவ சித்தாந்த சபை

இச் சபையின் ஆதரவில் (தெற்காடி வீதி, ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் திருக்கோவில், மதுரை 2.) ஞாயிறு தோறும் சைவ சமயச் சொற்பொழிவுகளை சிறந்த சைவ அறிஞர்கள் செய்து வருகின்றார்கள்.

நவம்பர் மாத நிகழ்ச்சிகள்

1-11-70 "பொய்யடிமையில்லாத புலவர்" —திரு சு. கோவிந்தசுவாமி

8-11-70 "கந்தழி" — புலவர் திரு. இறைக்குருவனார்

15-11-70 "சற்பக்கலை" — திரு A. V. ஜெயச்சந்திரன்

22-11-70 "கல்வெட்டுக்கள்" — திரு A. V. ஜெயச்சந்திரன்

29-11-70 "மதுரை பதிற்றுப்பத்தந்தாதி" — புலவர் திரு. தா. குருசாமி

குறிப்பு: சைவ சித்தாந்தசபையில் உறுப்பினராகச் சேர்ந்து சிவ தருமத்திற்கு உதவுமாறு ஷ சபையார் விண்ணப்பஞ் செய்துள்ளனர்.

உறுப்பினர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபா 1.00

## தக்ஷிண கைலாச மான்மியம்

(1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடையவரும் செந்நிறத் திருமேனியரும் கிரீடம் தரித்தவரும், அபயம், வரதம், கேடகம், வச்சிரம், சூலம், தாமரைப்பூ, சக்கரம், அம்பு, வாள், வேல், மணி என்னும் இவற்றைக் கரங்களிலே தரித்தவரும் தேவ சேனாபதியும் மயில்வாகனரும் சூரபதுமனைச் சம்மாரம் செய்தவருமாகிய தேவரீரைச் சரணடைந்தோம். என்று பலவாறு கதிர்காம கிரீசரைத் தோத்திரம் செய்தார்கள். அவர்கள் செய்த பூசையையும் தோத்திரங்களையும் கதிர்காமபுரேசர் ஏற்று மனமகிழ்ந்து "நீங்கள் விரும்பிய வரம் யாது" என்றார், தேவர்கள் வணங்கி நின்று "எம்பெருமானே யாவரும் தரிசித்து வணங்குமாறு இந்த மலையின்மேல் தேவரீர் எப்பொழுதும் எழுந்தருளியிருந்து எல்லா ஆன்மாக்களுக்கும் சகல சம்பத்துக்களையும் கொடுத்தருளல் வேண்டும் என்று வேண்டினார்கள் "கதிர்காம நாதசுவாமிகள் நீங்கள் விரும்பியவண்ணமே வரமளித்தோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன் பின்னர் சேனைகள் வந்து தம்பக்கலாகச் சூழ்ந்து வணங்க, வீரவாகு முதலிய வீரர்களும் பூதத் தலைவரும் முனிவரும் தேவரும் புஷ்பமாரி சொரிந்து வணங்க தேரில் எழுந்தருளி கதிர்காம மலையிலிருந்து திருச்செந்தூரிற் போய் அங்கே உள்ள ஆலயத்தில் இரத்தின சிம்மாசனத்தின் மேல் வீற்றிருந்தருளினார் பிரமா முதலிய தேவர்கள் மெய்யன்போடு ஆசனத்தின்மீது எழுந்தருளியிருக்கும் குகப்பெருமானைப் பூசனை செய்தார்கள் குமாரக் கடவுள் அப்பூசனையை ஏற்று மகிழ்ந்து பின் யாவரும் வணங்கிச் சூழ அவ்விடத்தில் இருந்து எழுந்தருளித் திருப்பரங்குன்றை அடைந்து வீற்றிருந்தருளினார். இந்திரன் சுப்பிரமணியக் கடவுளினுடைய திருமுன்னிலையிற் போய் வணங்கி எம்பெருமானே! "தேவரீர் விருப்பு வெறுப்பற்ற ஞான சொரூபியாயினும் ஆன்மாக்கள் உய்யுமாறு அடியேனது புதல்வியாகிய தெய்வயானை அம்மையைத் திருமணம் செய்தருளல் வேண்டும்" இது அடியேன் விண்ணப்பம் என்று பிரார்த்தித்தான். எல்லாப் பொருளையும் தமது உடைமையாகக்கொண்ட பரம்பொருள் பெருங்கருணையுடையவராய்ப் புன்னகை செய்து அவ்வாறேயாகுக எனத் திருவருள்பாலித்தார்.

இந்திரன் மனமகிழ்ந்து தன் மகளை அங்கே அழைத்து வரும்படி செய்து எங்கும் மணவோலை அனுப்பி பிரம விஷ்ணு முதலிய தேவரும் தேவப் பெண்களும் முனிவரும் முசுகுந்தன் முதலிய அரசர்களும் வந்து திருமணச் சாலையில் சூழ்ந்திருக்க இந்திரன் தனது புதல்வியாகிய தெய்வயானை அம்மையாரை மங்களச் சிறப்புடன் சிவகுமாரருக்குத் தத்தம் செய்து கொடுத்தான். குமாரக் கடவுள் சர்வான்மாக்களும் உய்யும் பொருட்டு அம்மையாரை ஏற்று திருமங்கல்யதாரணம் செய்தருளினார்.

பின்பு தெய்வயானையம்மையாருடன் வீற்றிருந்து தேவர் முதலிய யாவருக்கும் திருவருள்செய்து இந்திரன் முதலிய தேவர்களை விண்ணுலகத்தில் குடியேற்றி அங்கேயிருந்து எழுந்தருளித் திருக்கைலாச மலையை அடைந்து பார்வதி பரமேசுவரர்களை வணங்கி விடைபெற்று கந்தமலையிற்போய் தெய்வயானை அம்மையாரோடு வீற்றிருந்தருளினார்.

பின்பு ஒரு தினம் குமாரக் கடவுள் கந்தவெற்பில் இருந்து திருத்தணிகை வரையிற்போய் அங்கே வீற்றிருந்தருளும் தினங்களில் ஒரு தினம் நாரதமுனிவர் கந்தசுவாமியாரது திருச்சந்நிதியை அடைந்து வணங்கி "எந்தாய்" வள்ளிமலையின் ஓர் பாகத்திலே மான் வயிற்றிற் பிறந்து, வேடர் மகளாய்த் தினைப் புனங்காத்து ஒரு கன்னிகை இருக்கின்றார். அக் கன்னிகையின் அழகை யான் சொல்லவல்லவனல்லேன். தேவரீருக்கே அக் கன்னிகையுரியவராவர். தேவரீர் அக்கன்னிகையைத் திருமணம் செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்,

ஷண்முகக்கடவுள் நாரத முனிவரது வாக்கையும் வள்ளிநாயகி தம்மை நோக்கித் தவம்செய்ததையும் உணர்ந்து வள்ளிமலையை அடைந்து வள்ளிநாயகியார் முன் பல திருவிளையாடல் புரிந்து அம்மையாரை மகிழ்வித்து பின்பு வேடுவர்தொழ அம்மையாரைத் திருமணஞ் செய்து திருத்தணிகையில் வந்து அங்கே சில பகல் இருந்து கந்தவெற்பிற் சென்று இச்சா சத்தியாயும் கிரியாசத்தியுமாய் விளங்கும் வள்ளிதெய்வயானை அம்மையாரோடு எழுந்தருளியிருந்து ஞான சத்தியாகிய வேற்படையுடையவராய் எல்லா உலகங்களுக்கும் போக மோக்ஷத்தைக் கொடுத்து கருணை புரிந்திருந்தனர்.

[வளரும்]

## மக்கட் பிறப்பின் ......

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

வது, எல்லா உயிர்களையும் ஒருமையுடன் மதித்துத் தொண்டு புரிதல் Reverence for life) மேலானதாகும்.

'எத்துணையும் பேதமுறாது
எவ்வுயிரும் தம்முயிர்போல
எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய்
உவக்கின்றார் யாவர் அவர்
உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான்
நடம்புரியும் இடமென
நான் தேரிந்தேன்"

என்றும்

'அப்பா நான் வேண்டுதல் கேட்
டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லா நான்
அன்பு செயல் வேண்டும்"

என்றும் அருளிய இராமலிங்க அடிகளாரின் வாக்கு அநுபவ நெறியன்றோ!

"எவனது நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவனையே யான் மகாத்மா என்பேன்; அன்றேல், அவன் துராத்மாவே" என்று சுவாமி விவேகானந்தர் கூறுதலையும் உற்று நோக்குதல் வேண்டும்.

வேதாந்தம் குறிப்பிடும் பரப்பிரம்மமும், சித்தாந்தம் குறிப்பிடும சிவமும், பௌத்தம் குறிப்பிடும் நிர்வாணமும், சமணம் குறிப்பிடும் அருகத்துவமும் மெய்ப்பொருளாகிய அன்புநாட்டம் கொண்டவையே.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்து அன்புத் தொண்டிலே ஈடுபடும் போது, தன்னலம் இயல்பாய் ஒடுங்கி விடும்; அப்போது பொறிகளால் ஒருவன் துய்க்கும் புலனின்பத்தைத் தொண்டாகிய யோகத்தில் இணைக்க வேண்டும்; அதில் வெற்றி பெற்றால் புலன்கள் மேல்நிலை (Sublimation) பெற வாய்ப்பாகும். இதனை மனக் கட்டுப்பாட்டுடன் கூடிய தியானத்தால் அடையலாம.

தன்னையுணர்தல், அஃதாவது ஆத்ம சாட்சாத்காரம் (Self realisation) வாயிலாக இறைபணியுணர்ந்து நிற்றல், அல்லது, பிரம சாட்சாத்காரம் (God realisation) பெறுகின்ற நுட்பம் மிகச் சிறந்ததாகும். இதற்கு இறையருளும், தியாகவுணர்வும் அமையப்பெறுதல் வேண்டும்.

ஆக, தியாகமின்றி உலகில் எதுவுமே சிறந்தது கைகூடாது என்பது வெளிப்படை. சிந்தனையாளர் காண்டேகரும் கூட, "வாழ்க்கை என்பது புனிதமான ஆலயம்; தியாகந்தான் அதன் அடிப்படை" என்று அழகாகப் பேருண்மையைக் கூறுகின்றார்.

இல்லற வாழ்வுடையவர்கள் பிறர்க்கெனத் தொண்டு புரியும் போது சிறிது தந்நலம் கொண்டவராகவும் இயங்க வாய்ப்புண்டு. ஆனால் துறவற நன் மக்களோ முழுக்க முழுக்கத் தம் தூய வாழ்க்கையையே தியாக வேள்வியில் ஈடுபடுத்தலாம்; ஆன்ம நோக்கத்துடன் நாளும் உலகம் உய்யவும இறைநலம் பெருகவும் எண்ணிச் சீரிய தொண்டாற்றலாம். அதுவும் ஒருவகையில் தன்னலத்தின் அடையாளமே எனலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நெறிகளுணர்ந்து படிப்படியே உயர்ந்தோரும்; பக்தி, ஞானம், கர்மம்,

வளர்ச்சி 3-ம் பக்கம்

## நாவலர் பயின்ற கல்லூரியில் நாவலருக்குப் பெருவிழா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித் தமிழ் மன்றம் 6-12-70 அன்று நாவலர் விழாவைக் கொண்டாடியது. ஆசிரியர் திரு ஷண்முக. குமரேசன் விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் தமதுரையிற் கூறியதாவது:—

"ஆறுமுக நாவலர் மாணவராகவும் ஆசிரியராகவும் எமது கல்வி நிலயத்திற் பணியாற்றினர். திருவாவடுதுறை ஆதீனம் அன்னருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. நாவலர் என்ற பட்டம் பலருக்கு இருப்பினும் 'முதலில் அது யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரையே குறிக்கும்' என திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் குறிப்பிடுகிறார். திருவண்ணாமலை ஆதீனம் ஆறுமுக நாவலருக்குப் பட்டணப்பிரவேசம் அளித்தது.

செல்வன் வ. திருச்செல்வம் ஒரு சிற்றுரை நிகழ்த்தினர்.

சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி தமது உரையில் கூறியதாவது:-

"ஆறுமுக நாவலர் ஆற்றிய தொண்டை எமது நாடு மறக்க முடியாது. வீரம், நம்பிக்கை, அஞ்சாமை ஆகிய பண்புகள் அவரிடத்தே மலிந்துகிடந்தன

காற்புள்ளி, அரைப்புள்ளி ஆகிய தரிப்புக் குறிகளைத் தமிழிற் புகுத்திய நாவலர் பெருமான் சைவத்துக்கும், தமிழுக்கும் அரிய தொண்டாற்றினர். போலிக் கிறிஸ்தவர்களையும், போலிச் சைவர்களையும் கண்டித்த இத்தொண்டர் மாவட்ட அதிகாரிகளும் வீரத்தோடு கடிதம் எழுதினர். 7ம் நூற்றூண்டில் அப்பர் பெருமான காட்டிய வீரம் பிற்காலத்தில் நாவலருக்கு உண்டானது. பிள்ளைகள் மொழி கற்று ஒழுக்கத்தோடு வாழ்வதற்கு 'பாலபாடங்கள்' எழுதிய நாவலரை நாம் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவோம். (ந. வி.)

## தீபத் திருவிழா

சளுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் 11-12-70 அன்று ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு அபிஷேகமும், திருக்கார்த்திகைத் தீபத்திருவிழாவும் நடைபெற்றன. அடியார்கள் பலர் இதில் கலந்து கொண்டு வேலாயுதப் பெருமானை வழிபட்டனர் (ந. வி.)

## தேக வியோகம்

### ஸ்ரீமதி. மா. மங்களம்மாள்.

ஸ்ரீமதி. மா. மங்களம்மாள் சென்ற 12-12-70 வெள்ளிக்கிழமை தமது 88 ஆவது வயதில் சிவபதமடைந்தனர். அம்மையார் வண்ணார்பண்ணை பிரபல வழக்கறிஞர், B. A. தம்பி என்றழைக்கப்பட்ட திரு கதிரவேற்பிள்ளை அவர்களின் புத்திரியும், சைவபரிபாலன சபைத் தலைவராயும் ஆங்கில இந்துசாதனப் பத்திரிகையினது முதலாசிரியராயும் திருவனந்தபுரம் உயர் நீதிபதியாகவும் கடமையாற்றிய திரு. த. செல்லப்பாபிள்ளையவர்களினது இளைய சகோதரன் திருத. பொன்னம்பல பிள்ளையினது புத்திரன் திரு. பொ. மாசிலமணிப் பிள்ளையவர்களது மனைவியும், எங்கள் சைவ பரிபாலன சபைக் காரியதரிசி திரு ஆ. தனபாலசிங்கம் அவர்களது பெரிய தாயாரும், கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்களது மனைவி மகேஸ்வரதேவியினது தாயாருமாவர்.

அம்மையார் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வல்லவராய் விளங்கினர். சமயத் தொண்டு சமூகத் தொண்டுகள் பலவற்றை நெடுங் காலமாகப் புரிந்த இவர் 'தமிழ் மகள்' என்னும் பத்திரிகையின் ஆசிரியையுமாவர் எங்கள் சைவபரிபாலன சபைத் தொண்டுகள் பலவற்றிற்குத் துணை புரிந்தவர் அன்னருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

X X X

### சைவப்பெரியார் திரு. பொன். அப்புக்குட்டி அவர்கள்.

சைவத் திருவாளர், சிவபூஜா துரந்திரர் திரு பொன். அப்புக்குட்டியவர்கள் 12-12-70 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்தனர். அவர் சைவ பரிபாலன சபையின் நிருவாக அங்கத்தவராகவும் சமயப் பிரசாரகராகவும் நெடுங்காலம் தொண்டாற்றியவர். சபையின் சமயப் பிரசாரகராக யாழ்ப்பாணம் மறியற் சாலையிலும், கைதடி வயோதிபர் இல்லத்திலும் தொண்டாற்றினர்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வழிபாட்டைத் தினமும் செய்து வந்தவர். ஷை கோவில் தேர் முட்டியருகில் கந்தபுராண படனமும் நடத்தி வந்தவர். சமயப் பணி புரிவதற்காகத் தாம் மலாயாவில் வகித்த உத்தியோகத்தையும் வெகு காலத்துக்கு முன்பே துறந்து சமயத் தொண்டிலீடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய ஆன்மா சாந்தி பெறுவதாக.

X X X

### திரு. க. நமசிவாயம்

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திர சாலையில் நெடுங்காலம் லிகிதராகக் கடமையாற்றிப் பின்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதிச் சாலையில் நெடுங்காலம் உதவி விடுதியதிபராகவும் லிகிதராகவும் கடமையாற்றிய திரு. க. நமசிவாயம் அவர்கள் யாவரும் கலக்கமடைய 12-12-70 அன்று வெள்ளிக்கிழமை காத்திராப் பிரகாரம் அவருக்கு ஏற்பட்ட நோயினால் சிவபதமடைந்தனர்.

அவர் நேர்மை, கடவுள் பக்தி, சமயப் பற்று, ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் நிரம்பப்பெற்றவர் அவருடைய அகால மரணம் யாவரையும் துன்பக் கடலுள் ஆழ்த்தி விட்டது. அன்னாரின் மறைவு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் ஈடிணையில்லாத இழப்பாகும், அவரது ஆன்மா சாந்தியடைவதாக.

## உருவ வழிபாட்டின் தத்துவம்

[ நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலில் அணிமையில் கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்:-]

கடல் நீர் உப்புத்தன்மையது என்பதை அதனை முழுவதும் குடித்துத் தான் அறியவேண்டுமென்பதில்லை; சிறுதுளி நீரைக் குடித்தே அறியலாம். அதேபோல கடவுள் இருக்கிறார் என்பதை அவருடைய திருவருட் செயல்களைக் கொண்டே அறியலாம்.

அமெரிக்காவில் நிகழ்ந்த சர்வமத மகாநாட்டில் இந்துக்களின் பிரதிநிதியாகச் சுவாமி விவேகானந்தர் கலந்து உரையாற்றினர் அதன்பின், பெண்மணி ஒருவர் இவரிடத்தில் விக்கிரகத்தில் எவ்விதம் கடவுளை வழிபடலாம் என வினவினர் அப்போது சுவாமி ஒரு புகைப் படத்தை உடைக்கப் போனர்; பெண்மணி அது தன் கணவனுடைய படம், உடைக்க வேண்டாம் என்றாள். "அது வெறும் கண்ணாடி தானே; உடைந்தால் என்ன?" என்றார் சுவாமியார், "கணவனைப் போல அதைக் கருதுகிறேன்; உடைக்காதீர்" என்றார் பெண்மணி. "நீ புகைப் படத்தில் கணவனைக் காண்பது போலவே, விக்கிரகத்தில் நாம் கடவுளைக் காண்கிறோம்" என்றார் சுவாமி விவேகானந்தர்

இந்த நிகழ்ச்சியைக் கி வா. ஜ. ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டுப் பேசிய பின், ஐயங்களைக் கேட்கலாம் எனத் தான் கேட்ட போது, ஒருவர் "பெண்மணி கணவனைக் கண்டவள்; எனவே அவனது புகைப் படத்தைக் கணவனாகக் கருதுகிறாள். நாம் கடவுளைக் காணவில்லை. எப்படி விக்கிரகத்தைக் கடவுளென்று சொல்லலாம்?" என்ற வினா கேட்டதாகவும், அதற்கு விடையாக ஒரு கதையும் சொன்னர். அது:

'போர் வீரன் ஒருவன் திருமணஞ் செய்து குடும்பம் நடத்தி வந்தான். அவன் மனைவி கருப்பவதியானாள். இவ்வேளையில், அவன் போர் காரணமாக அயல் நாடு சென்றுவிட்டான். மனைவிக்குப் பிள்ளை பிறந்தது. பிள்ளையைப்பார்க்கவும் அவன் வரவில்லை. பிள்ளையின் ஆண்டு பூர்த்திக்கும் வரவில்லை. கடைசியாக அவன் போரில் மாண்டு விட்டதாகச் செய்தி அவளுக்குக் கிடைத்தது. அவள் மிகவும் வருந்தினாள்.

பிள்ளை வளர்ந்து வந்தது. அவன் ஒருநாள் தன் அன்னையைத் தன் தகப்பன் யார்? எனக் கேட்டான். அப்போது தாய் தங்கள் திருமணத்தின் போது எடுத்த புகைப்படத்தைக் காட்டி 'இது தான் உன் அப்பா' என்று சொன்னாள். அவன் தகப்பனைக் கண்டது போல் ஆனந்தமடைந்தான்.

எப்படி அவன் தன் தகப்பனை 'இது தான் உன் அப்பா' என்று தாய் கூற நம்பினானோ, அதுபோலவே நாமும் கடவுளைக் கண்ணாற் காணாவிட்டாலும், கடவுள் அருள் பெற்ற அனுபூதிமான்கள் கூறுவதைப் பின்பற்றி, விக்கிரகத்திலே கடவுளை எழுந்தருளச் செய்து வழிபடுகிறோம்; என்பதாகும்.

(நமது நிருபர்)

## சைவப்பெரியார் இராசரத்தினத்தின் சேவை மகத்தானது.

"திரு. சபாரத்தினம் போன்ற நல்லாசிரியர்களை நமக்களித்த பெருமை சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் மனேஜராயும், காரியதரிசியாயும் இருந்த சைவப் பெரியார் திரு சு இராசரத்தினம் அவர்களையே சேர்ந்ததாகும். இலங்கையில் எந்தப் பெரியாராலும் செய்யமுடியாத பெரிய கல்விப் பணியைப் புரிந்தவர் திரு, இராசரத்தினம் அவர்களே. நாவலர் பெருமானுக்கு அடுத்த படியில் சைவத்தையும், தமிழையும் பாதுகாத்த பெருமை சைவப்பெரியார் இராசரத்தினம் அவர்களையே சாரும். சைவப் பெரியார் திரு இராசரத்தினம் அவர்கள், நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை போன்ற பாடசாலைகள் நூற்றைம்பது மேல் ஸ்தாபித்து கல்வியை வளர்த்தவர். அவர் தெரிவு செய்த திரு. கு சபாரத்தினம் போன்ற ஆசிரியர்கள்சேவையின் மூலம் ஆற்றிய பணி ஒரு காலத்திலும் மறைய முடியாத பெரும் பணியாகும்"

நீர்வேலி தெற்கு. இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் தலைமையாசிரியராய்ப் பல்லாண்டுகாலம் பெருந்தொண்டு புரிந்த திரு கு. சபாரத்தினம் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பழைய மாணவர்களினாலும், பெற்றோர்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட பாராட்டுவிழாவில் வலி கிழக்குத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். திரு எஸ் வேதவனம் அவர்கள் தலைமையில் இக்கூட

வளர்ச்சி 4ம் பக்கம்

### மக்கட் பிறப்பின் மாண்பு

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பிரபத்தி மார்க்கங்களிலே முறையாகத் தலைப் பட்டு மேனிலையுற்றோர்களும் உலகினரை வெறுத்து ஒதுக்கியவர்களல்லர். பேரருளாளர்கள் பகையின்றி எல்லோருடனுடனும் ஒருமை உணர்வோடு கலந்துறவாடுகிறார்கள்; தாம் பெற்ற அருளனுபவத்தைப் பிறரும் பெற்றுய்ய அவாவி அழைத்துச் செல்லுகின்றார்கள். இராமலிங்க அடிகள் இறைவன் அருட்பேற்றைப் பெற்ற நிலையில் தம்நிலையில் மனநிறைவு கொண்டு விடாது.

(வளரும்)

### காரை. அபிவிருத்திச் சபை

ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் 20-12-70 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பாபலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திரு வே. சிவகுரு (பி. எஸ் ஸி. ஆனர்ஸ், தலைமையில் நடைபெறும்.

ஆண்டறிக்கை வாசித்தல், புதிய உத்தியோகத்தர் தெரிவு, தீர்மானங்கள் நிறைவேற்றல் முதலிய நிகழ்ச்சிகளுக்கு பின்பு யாவருக்கும் மத்தியானப் போசனம் அளிக்கப்படும். காரைநகர் வாசிகள் பலர் இக்கூட்டத்தில் பங்குபற்றுவார்கள்.

## உலகப்புகழ்பெற்ற ஈழத்து விஞ்ஞானி

உலகப்புகழ்பெற்ற இலங்கை விஞ்ஞானியான திரு சிறில் பொன்னம்பெருமா 17-12-70ல் ஈழம் வந்துள்ளார். இவர் இங்கு விரிவுரைகள் நடத்துவதற்காக வருகிகிறார். கொழும்பு கண்டி காலி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

திரு பொன்னம்பெருமா இலங்கையில் ஒரு மாதம் தங்கியபின் தாய்லாந்து மலேஷியா ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருக்கிறார்.

கலிபோர்னியா விண்வெளி ஆய்வு கூடத்தில் கடமையாற்றி வருகிறார். உலகில் இல்லாத ஒருவகை அமினோ அமிலத்தை இவர் கண்டுபிடித்ததினால் உயிரின் தோற்ற வளர்ச்சியில் புதிய ஒரு திருப்பம் ஏற்பட்டிருப்பது மட்டுமல்ல பூமியைவிட வேறு ஏதாவது கிரகத்தில் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கிறதென்பதையும் புலப்படுத்தியுள்ளது. அவுஸ்திரேலியாவிலுள்ள விக்டோறியாவுக்கருகே உள்ள கடலில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் விழுந்த வான் வெள்ளியில் இந்த புதிய அமினோ அமிலம் இருந்த அவர் கண்டு சொன்னர்.

திரு. சிறில் பொன்னம்பெருமா சுவீடன், பிரான்ஸ், இத்தாலி, இந்தியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து விஞ்ஞான ஆய்வுரைகளை நிகழ்த்தியுள்ளார்.


## Commission Sale

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில். வழக்கு இல: 10837

1. வீரசிங்கம் இராசா 2. பெண் சரஸ்வதி அம்பாள் வல்வெட்டி, வல்வெட்டித்துறை —வழக்காளிகள்

எதிராக

1. சுப்பிரமணியம் அருணாசலம் 2. பெண் முத்தாச்சி. பொலிஸ் ஸ்ரேசன் ஒழுங்கை வல்வெட்டித்துறை — எதிராளிகள்.

மேற் குறித்த இலக்க வழக்கின் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1971-ஆம் ஆண்டு தை மாதம் 27-ஆம் திகதி (27-1-71) புதன்கிழமை முற் பகல் 9-30 மணியளவில் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவற்பற்று வல்வெட்டித்துறையும் வல்வெட்டிக் குறிச்சியும் "நிருவந்தணும்பை" கி. ப. 26 குளி 16, 2/32 இணறு வழிவாய்க்காலும் இது பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் குறித்த 3184ம இலக்க வழக்கோடு அணைக்கப்பட்டதும், உலாந்தா மேஸ்த்தர் P ஏரம்புவால் 1968ம் ஆ யூலாய் மாதம் 1-ம் திகதி 324ம் இலக்கப் படத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி இதில் குறித்த படத்தில் 1-16 துண்டுகளுக்கு இதில் குறித்த படத்தில் 1ம், 2ம் நம்பர் துண்டுகளுக்கு கி. ப. 7 குளி 9. 12/32 எல்லை கிழக்கு குறித்த படத்தில் 6, 3ம் துண்டுகளும், வடக்கு கதிரவேற்பிள்ளை பொன்னுத்துரைக்குமுரிய ஆதனம் அல்லது குறித்த படத்தில் 1ம், 7ம், 15ம் துண்டுகள், மேற்கு சின்னப்பிள்ளை குட்டித்தம்பிக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கையும் குறித்த படத்தில் 5ம், 15ம் துண்டுகள் இவ்வெல்லைகளுக்குட்பட்ட வைடடங்கலும் வழிவாய்க்காலுரித்தும்.

(மதிப்பிட்ட விலை ரூபா 26, 250)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை:- ... | ரூபா 16,500-00 |
| வட்டி ரூபா 15,000/-க்கு 10 வீதப்படி 16-3-70 தொடக்கம் 22-6-70 வரை | 375-00 |
| வட்டி ரூபா 16,875/-க்கு 5 வீதப்படி 22-6-70 தொடக்கம் 27-1-71 வரை (விற்பனவு வரை) | 492-17 |
| கோட்டுச்செலவு | 387-89 |
| | 17755-06 |
| கொடுக்கப்பட்டது. | 2500-00 |
| மொத்த ரூபா | 15255-06 |

சிவலிங்கநிலையம், வி. மு. ரோட், பருத்தித்துறை, 16-12-70.

க. நல்லலிங்கம் ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர். எம், 429 18—12—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 11107

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் அனலைதீவு —வழக்காளி

எதிராக

1 முருகேசு கந்தையாவும்
2 பெண் தெய்வானை
இராமநாதபுரம், யூனிற் இல: 666-7 —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11107 ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1971-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ஆம் திகதி (9-1-71) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- 2500/-க்கு 16-9-69 தொடக்கம் 2-5-70 மட்டும் ரூபா 1300/-க்கு 12 வீத வட்டியும் பின் இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு கோட்டு உத்தரவு 2-5-70ன் படி ரூபா 125/-

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி அனலைதீவு கோவிற்பற்று அனலைதீவு 'நரியன்அலட்டி' பரவி. 4½ பனைகளும் தென்னைகளும் எல்லை கிழக்கும் தெற்கும் நாகநாதர் பெண் சந்திரமதியின் ஆதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு சண்முகம் கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்.

2 மேற்படி இறை 'முல்லைக்காடு' ப. வி. 10½, பனைகளும் மற்றும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு கந்தையா பெண் பொன்னம்மாவுக்குரிய ஆதனம்; வடக்கு ரோட்டு, மேற்கு கடற்கரை தெற்கு வேலுப்பிள்ளை அம்பலவாணருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இது அடங்கலும்.

சி. சே. மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர் ஏலத்தார்.
''விதானை வளவு''
சித்தன்கேணி. 18-11-70.
எம். 426 18-12-70

## COMMISSION SALE
### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 10763

கரணவாய் தெற்கு.
சேனர் கந்தையா —வழக்காளி

இமையாணன் குறிச்சி
சின்னக்குட்டி இராசா —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1971-ம் ஆண்டு தை மாதம் 18-ஆம் திகதி (18-1-71) திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று உடுப்பிட்டி இமையாணன் குறிச்சியிறை வெள்ளை நீலன்தறை யாதி நிலப்பரப்பு 17½ மேற்படி வடக்குப்பாதி நிலப்பரப்பு 3, 3/8 இவைகளில் நிலப்பரப்பு 13 குளி 4½ இதற்கு 1959ம் ஆண்டு வைகாசி மீ 24-ஆம் திகதி கலந்த மேஸ்தர் T. சின்னத்துரையால் 1414ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு 17 குளி 10½ இதில் தெற்குப் புறமாக நிலப்பரப்பு 7 நீக்கி மிகுதி வடக்குப் புறமாக நிலப்பரப்பு 10 குளி 10½

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நாகநாதர் நாகரத்தினம் (காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பரமசிங்கம்பிள்ளையின் சொத்துக்களுக்கு தத்துவகாரனாக நியமிக்கப்பட்டவர், வேலணை மேற்கு —வழக்காளி

வழ: இல. M B 9673 எதிராக

1 நமசிவாயம் பூபாலபிள்ளை, வேலணை
2 நமசிவாயம் குருசாமி, அல்லைப்பிட்டி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9673-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஞு தை மீ 9-ம் திகதி (9-1-71) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2472-20ம், 9-1-68 தொடக்கம் 12-1-70 வரைக்கும் ரூபாய் 1450/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 483-20

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று அல்லைப்பிட்டி இறை ''வெட்டியாடி'' பரப்பு நில லாச்சம் பதினைந்து தென்னைகளும் பனைகளும் வடலிகளும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சோமசுந்தரம் பெண் புவனேஸ்வரிக்கும் அருமைநாயகம் பெண் மகேஸ்வரிக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை. தெற்கு ரோட்டு, இவ்வாதனத்தில் சொரியலாய் 12/5 பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும் பதிவு இலக்கம்: யாழ்ப்பாணம் C 352/11

''கமலபதி''
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு, 7-12-70

மு. நவரத்தினராசா
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
எம். 427 18—12—70

## சைவப்பெரியார் இராஜரத்தினத்தின் சேவை மகத்தானது

3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி டம் நடைபெற்றது.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு வே. சண்முகநாதன், திரு கு. சபாரத்தினம் அவர்களின் நிழற் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினர்.

பண்டிதர் நீ. சி. முருகேசு, இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. பே. தம்பையா, திருமதி வேதவல்லி கந்தையா, வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி திரு. வ கந்தப்பிள்ளை உபடப்பலர் உரையாற்றிய பின், ஆசிரியர் திரு. க. ஆறுமுகம், திரு. கு. சபாரத்தினம் அவர்களுக்கு அன்பளிப்பு நூல்களை வழங்கினுர்

திரு. கு சபாரத்தினம் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்ததை அடுத்து அவர் தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப்பேசினுர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (நி. நி.)

எல்லை கிழக்கு சிதம்பரநாதர் வேலுப்பிள்ளைக்குடைய வாதனமும் குறித்த படத்தில் 2ம நம்பர்த் துண்டாகிய இந்தக் காணியால் விடப்பட்ட கைபொழுங்கையும் வடக்கு சின்னத்தம்பி சரவணைக்கும் மருபேருக்குமுடைய வாதனமும் சிவகுருநாதர் திருநாவுக்கரசுவுக்கு முடைய வாதனமும், மேற்கு இளைய தம்பி சின்னக்கண்டுவுக்கும் மருபேருக்குமுடைய வாதனமும் சிதம்பரநாதர் வேலுப்பிள்ளைக்கும் மருபேருக்குமுடைய வாதனமும் தெற்கு எதிரிக்குடைய மிகுதிப் பாகமும், கைபொழுங்கையும் சிதம்பரநாதர் வேலுப்பிள்ளைக்கும் மருபேருக்குமுடைய வாதனமும், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் அடங்கலும். பதிவு A. 146/204

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூ. | 2430-00 |
| ரூபா 1500/-க்கு 9-1-70 தொடக்கம் 15-5-70 வரையும் 4 மாதத்திற்கு 10 வீத வட்டி | ரூபா | 50-00 |
| ரூபா 2470/-க்கு 15-5-70 தொடக்கம் 15-10-70 வரையும் 5 வீதவட்டி | | 51-46 |
| செலவு | ரூபா | 181-15 |
| மொத்தம் | ரூபா | 2702-61 |

V. M கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
8-12-70 எம். 428 18-12-70

## பக்தியின் நிலை ?



பக்தர்: ''கடலில்அலை எப்படிப் பொங்கிப் பிரவாகித்துக் கொண்டு — குமுறிக்கொண்டு எழுகின்றதோ, அதேபோல ஆண்டவன்மீது நமக்குப் பக்தி எழ வேண்டும்; — அவரது அருட் கருணையை நினைந்ததும், எம் உள்ளம் உருகவேண்டும்'' என்று யாழ். திவ்வியஜீவனசங்கத்தின் புதியகட்டிடத்திறப்புவிழாவில் சுவாமி ஸ்ரீ சித்தானந்தமகராஜ் அவர்கள் கூறியபோது உள்ளத்தில் ஒருவித ஞான உணர்ச்சி தாண்டவமாடிச்சுது பாருங்க; இந்தமாதிரி ஞானச் செல்வர்களைப் பார்க்கிறதே பெரிய பாக்கியந்தான்; நீங்கள்வந்தீங்களா?

சித்தர்: ''இப்படியான ஒருஅரிய வாய்ப்பை யார்தான் தவறவிடுவார்கள்; வந்திருந்தேன்; சுவாமியவர்கள் ''ஓம்......'' எனும் மந்திரத்தை உச்சாடணம் பண்ணுகையில் எவ்வளவு அமைதியும் திருவருள் எழுச்சியும் பிறந்தது என்பதைக் கூற வார்த்தையில்லைப் பாருங்க! அன்று அங்கு பிரமாதமான கூட்டம்! அரிய பணிகள் புரிந்து வருகிற திவ்விய ஜீவன சங்கத்தை நாம் வாயார வாழ்த்த வேணும்!

''நாயன்மார் - நாதன்''

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. பொன்னையா நமசிவாயமும் 2. பெண் இராசம்மாவும். இருவரும் களபூமி காரைநகர். —வழக்காளிகள்

இல. M B. 10065 எதிராக

1. குமாரு முத்தையா செல்லத்துரையும் 2. பெண் பரமேஸ்வரியும் 266, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10065 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு தை மீ 23-ம் திகதி (23-1-71) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத்தொகை:— ரூபா 7200/-ம் 11-6-68 தொடக்கம் 16-6-69 வரைக்கும் ரூபா 5000/- க்கு 12 வீத வட்டியும், அதன் பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 380-25 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை ''குத்தகைத் தோட்டம்''(Kuttakai thoddam). விலப்பரப்பு 1,¾ ம், கட்டிடங்களும், கிணறும், செய்பயிர்|வான்பயிரும், மற்றும் உடமைகளும். எல்லை கிழக்கு-செல்லையா பெண் நாகமுத்துவின் உரிமையாளரின் ஆதனம். வடக்கு-ரோட்டு. மேற்கு-இராமசாமி பெண் நீலாம்பிகையின் ஆதனம், தெற்கு-கையொழுங்கையும், S. P. பொன்னுச்சாமியின் ஆதனமும். இதடங்கலும் அதனுடைமைகளும் D 239/240 ல்பதியப்பட்டது.

மல்லாகம்.
14-12-70

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்
Commisioner of Sales, & Auotioner & Values.
எம் 423 18 12—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அப்பாக்குட்டி அருளம்பலம், கோப்பாய் தெற்கு —வழக்காளி

இல: M B 11058 எதிராக

T. S. துரைராசா, 10/2, ஐயனார்கோவில் ரோட்டு. வண்ணார்பண்ணை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11058ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் சட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஞு தை மாதம் 16-ம் திகதி [16-1-71] சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 11,671-65ம், 22-8-69 இருந்து 20-11-69 வரைக்கும் ரூபா 9.400-00 க்கும் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 495-97 இதில் ரூபா 200-00 கழித்து அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை ''நாவலடி கொக்கன்கட்டும் பதக்கட்டும்'' மறு துண்டுகளும் விலப்பரப்பு நாலும் (4) வீடும். கிணறும், பனைகளும், செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு Dr S. துரையப்பாவின் ஆதனம், வடக்கு ரோட்டு. மேற்கு T. S. துரைராசாவின் ஆதனம். தெற்கு துரையப்பா அண்ணாமலையின் ஆதனம் இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

கா. தர்மலிங்கம்
உரும்பராய், 12-12-70,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம்.424 18-12-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. உரும்பிராய் துரையப்பா சிவசுப்பிரமணியம்
2. ஷியூர் பெண் மனோன்மணி —வழக்காளிகள்

வழ. இல: M B 10752 எதிராக

1. தங்கோடை காரைநகர் மேற்கு காரை நகர் வேலுப்பிள்ளை பொன்னுத்துரை 2. ஷியூர் பெண் பாக்கியம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 10752-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ஆம் ஞு தை மாதம் 23-ஆம் திகதி (23-1-71) சனிக்கிழமை முற்பகல் 11-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1550-ம் 8-4-69 தொடக்கம் 17-1-70 வரைக்கும் ரூபா 1000/- க்கு 10 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 238-12 சதம்.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி கரைச்சிக் கோவிற்பற்று பெரிய பரந்தன் இறை 'பெரிய பரந்தன் காடு' சேவையர் ஜெனரலால் தயாரிக்கப்பட்ட I. S. P. 8-ஆம் இலக்கப் படத்தின்படி 1-2 இலக்கத் துண்டு 27 ஏக்கர் 2 றூட் 26 பேர்ச்சஸ். இதில் வடக்குப் புறமாக முன் அறுதி விற்ற ஏக்கர் 2½ நீக்கி மிகுதி தெற்குப் புறமாக ஏக்கர் 25 பேர்ச்சஸ் 26 இந்த ஏக்கர் இருபத்தைந்து பேர்ச்சஸ் இருபத்தாறுக்கும் எல்லை கிழக்கு ரோட்டுக்கும் வாய்க்காலுக்குமாக விடப்பட்ட ஆதனம். வடக்கு இக்காணியின் மிகுதிப்பாகம். மேற்கு P. P. A, 1020 ம் இலக்கப் படத்தின் 13 ம் இலக்கத் துண்டு. ஆனல் இப்போ ரோட்டு. தெற்கு D. O 1413 ம இலக்கத்தில் கழிக்கப் பட்ட நிலம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும், இவ்வாதனம் ரூபா 1500/- க்கும் 16-9-1963 தொடக்கம் 9 வீதமான வட்டிக்கும் உறுதி இல. 7463 ன் படி முதன்மையீடாகக் கட்டுப் பட்டுள்ளது. அவ் ஈடு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு வழக்கு இல M B 9655 படி கோட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காரைநகர்
1970-ம் ஞு மார்கழிமீ 4-ம் திகதி.
எம். 425 18—12—70

வை. ஏரம்பமூர்த்தி
ஏல விற்பனையாளரும்.
கொமிசனரும், விலைமதிப்பாளரும்.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 18—12—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு, மு. மயில்வாகனம் அவர்கள்